**OS.NO: 114/2024**

**PW 1 :** ராஜாராம் த/பெ. ஏழுமலை

நாள் : 19.11.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எங்களுக்கும், பிரதிவாதிகளுக்குமிடையே என் அப்பா பெயரில் கிரையம் வாங்கிய சொத்து குறித்து பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. எனது அப்பா பெயரில் கிரையம் வாங்கிய சொத்துக்கு எனது அப்பா பெயரிலும் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி துக்காராம் பெயரிலும் பட்டா இருந்தது என்று சொன்னால் சரிதான்

அந்த பட்டா எண்.23 நிலம் சர்வே எண். 687/1 அதன் விஸ்திரனம் 4 ஏக்கர் 24 செண்ட் என்று சொன்னால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு அந்த பட்டவை UDR–ல் தவறுதலாக கொடுத்து விட்டதாக மனு கொடுத்தோமா என்றால் முதல் பிரதிவாதி எங்களுக்கு தெரியாமல் மேற்கண்ட சொத்தை அவருடைய மகனுக்கு செட்டில்மென்ட் பத்திரம் எழுதியதால் எனது தாயார், சகோதரி மற்றும் சகோதரர் சார்பில் நான் தான் மனு கொடுத்தேன்.

அந்த மனுவின் பேரில் RDO அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றதா என்றால் ஆமாம். அந்த விசாரணையின் முடிவு என்ன ஆனது என்றால் அவர் விசாரித்து அறிக்கையை DRO–விற்கு அனுப்புவதாக கூறினார். அதன் பிறகு DRO அலுவலகத்தில் இருந்து உத்தரவு வந்ததா என்றால் வந்தது. அதில் மேற்கண்ட பட்டா எண்.23 சர்வே எண். 687/1 எங்களுக்கு சொந்தமானது என்றும் அது தவறுதலாக கூட்டு பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு 28.06.2017 அன்று பிறப்பிக்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த உத்தரவு **பிவாசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் எங்களுக்கு எதிராக அசல் வழக்கு எண். 109/2017 என்ற வழக்கை அரக்கோணம், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்றால் ஆமாம். அந்த வழக்கு பின்னிட்டு நீதிமன்ற உத்தரவு பெற்று அசல் வழக்கு எண். 19/2020 ஆக இராணிப்பேட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றபட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கு பின்னிட்டு இந்த நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண். 117/2024 ஆக மாற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

அசல் வழக்கு எண். 109/2017 என்ற வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் இராணிப்பேட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.18/2019 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 114/2024 ஆக தற்போது மாற்றம் செய்யபட்டு விசாரணை நடந்து வருகிறது என்று சொன்னால் சரிதான்.

ஆகையால் இந்த வழக்கு பிரதிவாதிகள் கூறுவது போல் என் தந்தை பெயரில் கூட்டுக் குடும்ப வருமானத்தில் கிரையம் பெறப்பட்ட மேற்கூறிய சொத்தில் இந்த வழக்கு 1–ம் பிரதிவாதிக்கு சமபாகம் ஒதுக்கப்பட்டு வாய்ச்சொல் பாகப்பிரிவினை என்பதால் கூட்டு பட்டாவாக பெறப்பட்டிருந்த பட்டாவை என் தந்தையின் காலத்திற்கு பிறகு பத்திரத்தை அனுகூலமாக கொண்டு நான் மட்டும் மாற்றியதால் அவர்கள் எங்கள் அனைவரின் பெயரிலும் மேற்சொன்ன வழக்கை தாக்கல்

செய்துள்ளதால் அதன் விரோதத்தின் பேரில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறிய சொத்து சர்வேண். 687/1 நிலம் குறித்து வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அந்த நிலம் எங்களுக்கு சொந்தமானது என்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக நான் கூறுவது தவறு என்று சொன்னால் தவறு.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.20 19:00:45 +0530

II Additional District and Sessions Judge,

Arakkonam.